REGD. No. M. 6311

PHONE No.: 55630

தனி இதழ் ஒரு அணா

இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 307

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: வைகாசி 26உ செவ்வாய் (8—6—54) ★ ★ ★ வெளியூர்: வைகாசி 27உ புதன் (9—6—54)

டாக்கா நகர் மார்வாடிகள் ஓட்டம்!

புரட்சிக்கு புத்தறிவு பூத்திட வேண்டும்

மனவளம் பெற்றால்தான் சமதர்ம மணம் கிடைக்கும் | முப்பெரும் புரட்சிக்கு வித்திட்டவரை மறவாதீர்

சமூக மறுமலர்ச்சிக்கு கூட்டணி தேவை

அண்ணாதுரை அன்பழைப்பு

சென்னை, ஜூன் 8—

"ரஷ்ய நாட்டைப் பற்றியும், அங்கு நிலவுகிற பொதுவுடைமை ஆட்சி பற்றியும் பேசுகிறார்கள்; நானும் ரஷ்ய நாட்டின் சரித்திரம் படித்துத்தான் இருக்கிறேன்; டாஸ்ட்டாவெஸ்கி, டர்கினவ், டால்ஸ்டாய் போன்ற மேதைகள் அந்நாட்டுச் சமுதாய சீர்திருத்தத்தில பெரும் பங்கு ஏற்றிருக்கிறார்கள்; அவர்களின் சமுதாயப் பணிக்குப் பின்னர்தான்—அவர்கள், அந்த நாட்டு மக்களின் மனதைப் பண்படுத்தி வளப்படுத்திய பின்னர்தான், அந்நாட்டில் புரட்சி பொங்க முடிந்தது—பொதுவுடைமை மலர முடிந்தது."

—இவ்வாறு, நேற்று மாலை 7-மணிக்கு சென்னை ஆழ்வார்பேட்டை மக்கள் முன்னேற்ற மன்றத்தின் 2-ம் ஆண்டு விழாவில் கலந்துகொண்ட பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"அதேபோன்றுதான் பிரான்ஸ் நாட்டிலும்—வால்டேரும், ரூசோவும் அந்நாட்டு மக்களைப் பழமைப் பிடியிலிருந்து விடுவிக்க பலனுள்ள பணி பல புரிந்த பின்புதான், அந்த நாட்டிலேயும் புரட்சி வாடை எழுந்தது"

"சீனா சமீபத்திலே சிவப்பாகியிருக்கிறது; அந்தச் சிவப்பின் சிறப்புப் பற்றிப் பேசுகிறார்கள்; அந்த சிவப்பின் மணம், இமயம் தடுத்தாலும் இந்தியாவிலும் வீசத்தான் செய்கிறது; சீனாவை சிவப்பேறிய மா-சே-துங்கிற்கு முன்னால் சீனமக்களின் மனதைக் கப்பியிருந்த மடமையை, பழமை எண்ணங்களை, மதமாச்சரியங்களை மாய்க்க ஒழிக்கப் பாடுபட்ட சன்-யாட் சென்னை மறந்துவிட முடியாது; சன்-யாட்-சென் சீன மக்களின் உள்ளத்தைப் பண்படுத்தியபின்னர்தான், மா-சே-துங் நாட்டைச் சிவப்பாக்க முடிந்தது; அதற்காக நான் மா-சே-துங்கைக் குறைத்து மதிப்பிடுவதாக எண்ண வேண்டாம்; அதேபோன்று, சீனாவின் சிவப்பு பற்றிப் பேசுபவர்கள், சன்-யாட்-சென்னின் சமூகப் பணியையும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது."

"ஆகவே, இந்த நாட்டு மக்கள் உண்மையிலேயே முன்னேற வேண்டுமானால் அவர்களின பழமை எண்ணங்கள் அகற்றப்பட வேண்டும். பழமை எண்ணங்களிலிருந்து மக்கள் விடுபட்டாலன்றி, தங்களை அரசாளும் ஆட்சியைத் திருத்தியமைக்கவோ, விரட்டவோ முடியாது."

"இன்று சீனக் குடியரசு, திபெத் நாட்டில் சமூகப் பணியை மேற்கொண்டிருப்பது கண்டு நான் மிக மகிழ்கிறேன்; அங்கு—லாமாவின் சிரம் அசைந்தால் அதுவே சட்டம்; கரம் அசைந்தால் அதுவே வேதம்—என்றெண்ணியிருந்த மக்களை, இன்று, சீன கம்யூனிஸ்டு கட்சியின் கலைப் பிரிவினர் சீர்திருத்த முற்பட்டிருப்பது வெகுவாக வரவேற்கப்பட வேண்டியதல்லவா?"

"அதேபோன்று இந்நாட்டவருக்கு, நாம் இந்தத் தலைமுறையிலேயே நல்லதொரு சமூக முன்னேற்றத்தைப் பெற்றுத்தந்தாக வேண்டும்."

"இந்த நாட்டு மக்கள் முன்னேற பல கட்சிகள் தேவையா என்றால், தேவைதான்; ஆனால், அக்கட்சியினர், இந்தச் சமுகத்தை முன்னேற்றும் பணியில் ஒன்றுபட வேண்டுமென விரும்புகிறேன்."

"சமுதாயச் சீர்திருத்தப் பணியேதான இறுதி இலட்சியம் என்பதும் இல்லை; மக்கள் எல்லோருக்கும் எல்லா இன்பமும் கிடைக்க நல்லதோர் வாழ்வு மலர இன்றியமையாத இந்தப் பணி, நிலவை மூடியிருக்கும் மேகத்தை அகற்றுவது போன்றது; அந்த மேகம் அகற்றும் வேலை முடிந்ததும் நல்ல நிலவொளியை நாம் பெறத்தான வேண்டும்.

"அந்த நல்வாழ்வைப் பெற முதற்கண், 'மறுமலர்ச்சி தேவை' என்பதை உணர்ந்து இந்த மன்றத்தார், அந்த மறுமலர்ச்சிப் பணியை செவ்வனே செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

(பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் சொற்பொழிவின் பிற பகுதிகள் நாளை வெளிவரும்)

லோகியா ராஜிநாமா

"அகில இந்திய பிரஜா-சோஷலிஸ்டு கட்சி பொதுச் செயலாளர் பதவியை டாக்டர் ராம் மனோகர் லோகியா ராஜிநாமா செய்துவிட்டார்."

சுராவர்தி

கராச்சி, ஜூன் 6—

கிழக்கு வங்க, ஐ. மு. தலைவருள் முக்கியமானவரான சுராவர்தி வைத்திய சிகிச்சைக்காக சுவிட்சர்லாந்து புறப்பட்டுவிட்டார்.

நஷ்ட ஈடு கோரிக்கை!

பிக்னி தீவில் அமெரிக்கா நடத்திய நீர்வளிக் குண்டு சோதனையினால் நஷ்டம் ஏற்பட்டதாகக் கூறி, 12,68,07,200 யென் (ஜப்பான் நாணயம்) நஷ்ட ஈடு தரவேண்டுமென்று அமெரிக்காவை ஜப்பான் மீன் பிடிப்போர் சங்கம் கேட்டிருக்கிறது.

கவர்னர் ஆட்சி கண்டு கிலி!

முதலாளிக் கோட்டை உடைபடும்?

கிழக்கு வங்கத்தில் கலக்கம்

மார்வாடிகள், டாக்கா நகரை விட்டு ஓடுகிறார்கள்.

விமான மூலம், கல்கத்தாவுக்கு மார்வாடி முதலாளிகள் செல்கிறார்கள்.

கிழக்கு வங்கத்தில் கவர்னர் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து டாக்காவில் சணல் ஆலைகளில் பெரும் முதல் போட்டு இலாப வேட்டையாடி வரும் மார்வாடி முதலாளிகள், கிலி கொண்டுவிட்டனர்.

அமைதியாக இருந்துகொண்டு இலாபக் கொள்ளை அடித்திட முடியாது என்ற அச்சம் அவர்களைப் பிடித்தாட்டுகிறது.

கவர்னர் ஆட்சியின் காரணமாக ஏற்பட்டுள்ள குழப்பமும் கலக்கமும், பொது மக்களைப் புரட்சிப் பாதையிலே துரத்துமானால், தங்கள் நிலைமை படுமோசமாகிவிடும் என்று அவர்கள் பயப்படுகிறார்கள்.

கிழக்கு வங்க சணல் தொழிலில், நூற்றுக்கு எண்பது பங்கு, மார்வாடிகளே முதல் போட்டிருக்கிறார்கள்.

சணல் தொழில், பெருத்த இலாபம் தருவதாகும்.

பாகிஸ்தானுக்குள் புகுந்து இலாப வேட்டையாடி வரும் வாய்ப்புப்பெற்ற மார்வாடிகளுக்கு, கவர்னர் ஆட்சி ஏற்பட்டது பெரிய ஆபத்தாக வந்து முடிந்திருக்கிறது.

பாகிஸ்தான் சர்க்கார் முதலாளிகளுக்கு - பாதுகாப்பளிக்கும் என்ற தைரியம் ஒரு புறம் இருந்தாலும், பொது மக்கள், மார்வாடிகளின் சுரண்டலை வெறுத்து வருகிறார்கள், எக்காரணத்தாலேனும் கொதிப்பு மூண்டால் பொது மக்களின் பகை தங்கள் மீது பாயும் என்ற பயத்தாலேயே, மார்வாடி முதலாளிகள் டாக்காவை விட்டு ஓடி விடுகிறார்கள்.

பாரிஸ் பசப்பு—மீண்டும்!

பாரிஸ் சமரசப் பேச்சு முறிந்து விட்டது என்ற போதிலும் விடுதலைக் கிளர்ச்சியை மேலோங்க விடாமல் செய்வதற்காக மீண்டும் பாரிஸ் சமரசம் பேச விழைவதாகப் பசப்புகிறது. நேரு சர்க்காரும் இந்த பசப்பு மொழியில் ஏமாறுகிறதாகத் தெரிகிறது.

'வேலையின்மை போக-நாடு தொழில்மயமாக வேண்டும்'

தேஷ்முக் தெளிவு பெறுகிறார்

பூனா, ஜூன் 7—

"இந்தியாவில இன்று நிலவும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை சுலபமாகவும், சீக்கிரமாகவும், தீர்க்கப்படக் கூடியது என்று எதிர்பார்ப்பது தவறானது; அது படிப்படியாகத்தான் போக்கப்பட முடியும்;

"ஓரே ஆசிரியரைக் கொண்ட பள்ளிகள் துவக்குதல், சிறுசிறு குடிசைத் தொழில்களை வளர்த்தல் இவை எல்லாம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க மேற்கொள்ளும் தற்காலிக வழிகளே;

"நாட்டைத் தொழில் மயமாக்குவதின் மூலம்தான்

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தோ—சீனாவில் அணுகுண்டு வீசுக

அமெரிக்க செனட்டர் யோசனை

★

வாஷிங்டன், ஜூன் 7—

சென் ஸ்டைல்ஸ் பிரிட்ஜ் என்ற அமெரிக்க குடியரசுக் கட்சி செனட்டர், "இந்தோ—சீனா போருக்கு அமெரிக்கத் துருப்புகளை அனுப்புவதைக் காட்டிலும் அங்கே ஒரு அணுகுண்டை வீசுவது சிறந்ததாகும்," என்று கூறினார்.

"அமெரிக்கரின் உயிரைக் காப்பாற்ற நான் எங்கேயும் அணுகுண்டை வீசத் தயங்கமாட்டேன்," என்று அவர் மேலும் கூறினார்.

வேலூர் அழைக்கிறது! வீரர்காள்! வாரீர்! ஜூன் 19—20

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 8 6—54 செவ்வாய்

'யமதேவன்' சாக!

அறியாமை—மக்களை, தாங்கள் தோன்றிய காலமுதல், உடும்புபோல் விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு தொடர்ந்து நிற்கும் ஒரு தொழு நோய்! அறிவுக்குப் பொருந்தாத மூடப் பழக்க வழக்கங்கள், மடைமையின் கண்களுக்குப் புனிதமான கோட்பாடுகளாகக் காட்சியளிக்கும்!

இதைக் கட்டிக் காப்பர், 'அற்புதம்' எனப் பெயர் கூறி, மதவாதிகள்—புரோகிதத் திருமேனிகள்! கடவுள் செயலென்பர்—பேயின் சேட்டை என்பர்—பரிகாரமும் உண்டெனப் புராணக் கதை படிப்பர்—மனிதாபிமானமற்ற மாமிசப் பிண்டங்கள்!

மக்கள் கூட்டம் அறிவொளி பெறுவது—தங்கள் ஆதிக்கத்திற்கு, அகம்பட்டதைச் சுருட்டும் அக்கிரம சோம்பேறி வாழ்விற்கு, சாவு மணி அடித்ததாக முடியும் என்பதை, புராணப் புல்லர்கள் அறிவர்! கடவுள் காப்பாளர் தெரிவர்!

எனவே, பொய் மலிந்த கற்பனைக் கதைகளைக் கூறி, கதிதேடும் மார்க்கம் இது வென இச்சகம் பேசி, மக்களின் அறிவுக் கண்களைக் குருடாக்குவதிலே, இந்த நாசகாலர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பர்!

அறிவு பெறுவது, மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது என, அறிவு பெறலை வலியுறுத்துவோரையும், போதிப்போரையும், வேத நிந்தகர்—நாத்திகர்—ஒழுக்கங் கெட்ட இழிமக்கள்—நாசகாலர்கள் எனப் பழித்துக் கூறி, அந்த நல்லறிவாளர்கள் மீது, மடைமை வலையில் சிக்கிக் கிடந்த அப்பாவி மக்களை ஏவி விட்டனர், இந்த நாயினும் கடையர்கள்!

ஈடாகப் பெற்றனர், பெறுகின்றனர்—தமக்கும், தங்கள் குடும்பத்திற்கும் இகலோக வாழ்வு! தாளாற்றித் தந்த பொன்னையும் பொருளையும் காணிக்கையாக ஈந்தனர்—இந்த மதோன்மத்தர்களின் அரோகச் செயலுக்கு!

இதுகண்டு, சூதுமதியினர் மகிழ்ந்தனர் — நல்லறிவாளர்கள் பிரசாரம் தோற்றது என உள்ளம் பூரித்தனர்—இவ்வுலுத்தர்கள்! என்றென்றும் இந்நிலை நீடிக்கும் என இறுமாந்தும் இருந்தனர், இந்த மனிதகுல எதிரிகள்!

இப்போலி லாங்குக்காரர்களின் புன்மை செயலுக்கு அறிவின் தூதுவர்கள் கொடுத்த பலியோ, கொடுமை மிக்கது—மகா மகா கோரமானது! எழுதுவதற்கும் எண்ணுவதற்கும் இதயத்தை உலுக்க கூடியது!

மடைமைப் பிடியிலிருந்து மக்களை மீட்க, அறிவைப் பரப்பியவர், நஞ்சுண்டு கனிந்த கொடுஞ் சேதி உண்டு ஏட்டில்!

கம்பத்திலே பிணிக்கப் பட்டு, தீ மூட்டிக் கொளுத்தி சித்திரவதை செய்யப்பட்டு கருகிச் சாம்பலாக்கப்பட்டுள்ளார், ஒரு பகுத்தறிவாளர்!

மக்களின் அறிவுக் கண்களைத் திறக்க முயன்ற மற்றொருவர், மூட அதிகாரத்தின் கொடிய ஏவுதலுக்கு உள்ளாகி, பல ஆண்டு இருட்சிறையின் இன்னல் தாங்கி, சொந்தக் கண்களைப் பறிகொடுத்துள்ளார்!

பொன்னுக்கா, பொருளுக்கா, சொந்த வாழ்வுக்கா, குடும்ப சுகத்துக்கா, ஏனைய புகழுக்கா தங்கள் ஆருயிரை இழந்தும், அதை இழந்துவிடுவதே மேல் என்று சொல்லத் தக்க அளவிற்குச் சொல்லொணாக் கொடுமைகளைத் தாங்கிக்கொண்டும் அறிவின் தூதுவர்கள், பகுத்தறிவுப் பாதை செப்பனிட்டது—நிலை நாட்டினது?

சொல்லத் துணியார்—அவர் எதிரிகளும்! அப்படிப் பொய்கூறி ஏடெழுதத் துணிவில்லை, அந்த மத குருமார்களுக்கு!

முட்டியை அரைத்துக் கொண்டதும், மூக்கை அறுத்ததும், தலை முடியைக் கத்தரித்ததும், பிரம்படிபட்டதும், தீக்குளித்ததும், 'திருக்கைலாயம்' சென்று 'சிவனடி' சேரவேயல்லாது, மக்களின் மடமையை நீக்க அல்லவே அல்ல! அவர்கள் கூற்றுப் போல் 'புனித'மானச் செயலாக இருக்கலாம்; ஆனால், முதல்தரமான சுயநலம்!

அறிவின் தூதுவர்கள், கஷ்ட நஷ்டங்களை ஏற்றும், உயிரைப் பணயமாக வைத்தும், மனித குலம் அறிவு பெற—முன்னேற, பாடுபட்டனர்; பழிச் சொல் ஏற்றனர்! அவர்களுக்கு அல்லல் பல தந்த ஆஷாடபூதிகளோ, சுயநல வேட்டை ஆடினர்!

அணு துளைக்கப்பட்டது—அதன் அழிக்கும் சக்தி அம்பலமாக்கப்பட்டது! அதைக் கொண்டு, மக்களின் நல்வாழ்விற்கு நலம் பலவும் தேடலாம் என முடிக்கப்பட்டுள்ளது—முயற்சியில் வெற்றியும் கிட்டியுள்ளது.

நெருப்பு, நிலக்கரி, நீராவி என்ற நிலை மாறி, பெரும் பணி புரியும் மின்சாரம், மனித வாழ்வின் சுமையைக் குறைக்கும் சூக்ஷம சக்தியாக பரிணமிக்கும் காலம் ஏற்பட்டது இனி அதுவும் மாறி வேறு ஒரு சூக்ஷும சக்தி, அதனிடத்தை ஆக்ரமித்துக் கொண்டு, மனித வாழ்வை வளமாக்கும் என்ற புது நிலை பிறந்திருக்கிறது!

இப்புது நிலை, வான்மண்டலத்திலே சென்றவர்கள் தேடிய தல்ல! கைலாயகிரியை சிவகணங்களாக மாறியவர் உருவாக்கியதல்ல! வைகுண்டநாதனின் வாயில் காக்கும் பேறு பெற்றவர் இயற்றியதல்ல!

உயிர் கொடுத்த உத்தமர்கள்—அறிவின் தூதுவர்கள், நாட்டு மக்களுக்குத் தந்த பெருந்தனம்—பிறநலம் பணியின் பெரும் விளைவு!

• • •

இது அணு ஆராய்ச்சிக் காலம்—அய்யனார் அருள் தேடி காட்டுக்குச் சென்று, ஊசி முனையில ஒற்றைக் காலால் நின்று, அன்ன ஆகாரம் வெறுத்து, நீரும் நாவைத் தீண்டாமல் பாதுகாத்து கடுந்தவம் புரியும் காலமல்ல இது!

இந்தக் காலத்திலும் அம்மை நோயைத் தடுக்க, வெப்ப நோயை விரட்ட 'யமன்' கருணைக்கு மனுப் போடும் மங்கைநல்லார் நாட்டிலே உள்ளனர் என்றால் நல்லறிவாளர்கள் கண்கள் நீரையா சிந்தும், குருதியை யல்லவா வெள்ளமாகக் கொட்டும்?

செய்தி வேடிக்கையானதாகத்தான் இருக்கிறது—நம் போன்றோர்க்கு வேதனை தரும் வரலாறாகவும் இருக்கிறது!

அம்மை நோய் — மிகக் கொடிய வெப்ப நோயாகும். எல்லா நோய்களும் கிருமிகளால் உண்டாவது போலவே, அம்மை நோயும் உண்டாகிறது என்று கூறுகிறது மருத்துவ நூல.

அதைத் தடுக்க, வீரியம் குறைந்த அம்மைக் கிருமிகளை ஒருவரின் உடம்பில் செலுத்தினால், ஏறத்தாழ பதினைந்து ஆண்டுக் காலம் அம்மை நோய் அவரைப் பீடிக்காது என்றும் மருத்துவ நூல் பரிகாரம் கூறுகிறது. அதன்படி அரசாங்கமும் தடுப்பு முறைகளை மேற்கொண்டு வருகிறது.

ஆனால், ஜோத்பூரில் உள்ள பூரணகுகள், இவ்விஞ்ஞான உண்மைக்கு மாறாக, நடந்து கொண்டு இருக்கிறார்கள்! தங்கள் குழந்தைகளின் உடலில் வன்மை குறைந்த அம்மைக் கிருமிகளைச் செலுத்திக் கொள்வதற்குப் பதில, 'யமன்' இருக்கும் இடம் தேடி சுடுகாட்டிற்கு ஓடி இருக்கிறார்கள்! 'யம தேவனை'க் காண நள்ளிரவில் உடைகளைக் களைந்து நிர்வாணமாகச் சென்றிருக்கிறார்கள் அந்நாரீமணிகள்!

'யமதேவன்' பற்றி கதை கட்டிவிட்டவர்கள், மத குருமார்கள் எனும் எத்தர்கள் தானே! எங்கோ, ஏதோ ஒரு 'சொற்பொழிவு'ச் 'சுந்தரி' 'காலட்சேபம்' செய்துகொண்டு இருக்கும்போது, யமதேவனின் அதிகார வரம்பையும், ஆற்றலையும் ஆதியோடு அந்தமாகக் கூறியிருக்கிறது! நீர் முகக்கச் சென்ற இடத்தில் பேதையர் பரிமாறிக் கொண்டுள்ளனர், இக்கருத்தை! அது கேட்டு, 'யமதேவன்' எனும் கற்பனைச் சிலந்தியின் வலைக்குப் பலியாகி, மூடக் கற்பனை சிலந்திக் கூட்டில் சிக்கிக் கொண்டனர்—ராஜபுத்திர ரமணிகள்!

தினம் தினம் காணும் விஞ்ஞான அற்புதம், சுகந்தரும் விஞ்ஞான ஏற்பாடுகள், அப்பெண்களின் அறியாமையை அகற்றத் துணை செய்யவில்லை அவர்களுடைய அறிவுக் கண்களைத் திறக்க, அப்புதுமைகள் போதியதாக இல்லை.

அம்மை நோயின் தோற்றத்தையும், அது பற்றும் தன்மையையும், முன்கூட்டியே அதைத் தடுத்திடும் முறையையும், அப்பெண்கள் புரிந்து கொள்ளும் வகையில் போதிக்கப்பட்டு இருந்தால், மூடப் பழக்க வழக்கங்களை விட்டொழிக்க விளக்கம் கொடுத்திருந்தால், அப்பெண்கள், அம்மை நோயை மட்டுமல்ல, வேறு எந்த நோயையும் தடுக்க 'யம தேவனை'த் தேட முனைந்திருப்பாரா? நோய் தடுக்கும் மருத்துவரை நாடி, தக்க முறைகளை அல்லவா அறிந்து, கடைமுறையில் மேற்கொண்டும் இருப்பர்?

எனவே, அவர்கள், நீண்ட காலமாக நம்பிக்கையின் மூலம் பெற்று வந்த 'யம தேவனி'ன் கருணைக்கு மனு போடும் மூடநம்பிக்கையைத் தளத்தை மேற்கொண்டுள்ளனர்!

நிர்வாணமாகச் சென்றனராமே, நடுநிசியில், அந்த நாரீமணிகள்! எவ்வளவு துணிச்சல்! எத்துணை நெஞ்சழுத்தம்! மடமையின் பிடி, அவர்களுக்கு, மான உணர்ச்சியைக்கூட விட்டொழித்து நடந்துகொள்ள அல்லவா, ஊக்கம் தந்திருக்கிறது!

நடு இரவில், சுடுகாடு நோக்கி, தாங்கள் நிர்வாண கோலமாகச் செல்வதை பிறஆடவர் காண நேர்ந்தால், நாணம் தூக்கிட்டு, நோக்கத்தைக் கெடுக்குமே என்ற நல்லறிவு கூட, அப்பெண்களுக்கு இல்லாமற்போய்விட்டது! மூட நம்பிக்கையின் ஆற்றல்—வன்மை, அப்பெண்களை, அக்கோலத்தில் செல்லச் செய்திருக்கிறது!

அம்மை நோயிலிருக்கும் குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டுமென்ற வேகமாவும், அவர்களை, கோட்டானும் நரியும் அச்சந்தரும் கூச்சலிடும் வேளையில், மயானத்திற்கு மானத்தைத் துறந்து செல்லும் துணிவைக் கொடுத்திருக்கிறது என எண்ணுவதும் பொருந்தக் கூடியதே யாகும்!

பத்துத் திங்கள் சுமந்து பெற்ற செல்வங்களை காக்கும் பேரவா, அதற்காக எத்தகைய பயங்கர கஷ்டங்களையும் ஏற்றுக்கொள்வது என்ற கடமை உணர்ச்சி, அப்பெண்களுக்கு இருந்த காரணத்தினால் அல்லவா, நிசப்தமான நிசியில், பிண வாடை வீசுகாட்டில், பிறந்தத் திருமேனியுடன், 'யமதேவனு'க்கு பூஜை போடும் நிலை அவர்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது?

அத்தகு நெஞ்சழுத்தம் கொண்ட பெண்களிடம் பகுத்தறிவு பிரசாரத்தை, முறையாக நடத்தி இருந்தால், பகுத்தறிவு பணி புரியும் பெண்மணிகளாகவல்லவா அவர்கள் காட்சியளித்திருப்பர்? அதுகாலை, நாட்டிற்கும், மாதர் குலத்திற்கும் அறிவொளிதரும் வழிகாட்டிகளாக அவர்கள் இருந்திருப்பரேயல்லாது, 'யமதேவனை' இல்லாத இடத்தில் தேடி அலையும் சிறுசெயலைச் செய்யவா துணிந்திருப்பவர்?

அம்மை நோயை விளக்கிக் கூற அரசாங்கம் முன்வந்தால், அதற்கான எல்லாவித பிரசார சாதனங்களையும் உருவாக்கினால், அப்பெண்கள், இவ்வாறு நிர்வாண கோலமேற்று, பாதி இராத்திரியில் பயங்கரமான புதைகாட்டுக்கு, யமதேவனின் அருளை வேண்டி செல்ல முன்வருவாரா என்பதை, நாடாளுகிறவர்கள் மட்டுமல்லாது, பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள நல்லறிவாளர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மூடப் பழக்க வழக்கங்களை சாடும் எரிச்சல் பிரசாரம் அழுத்தமான மடைமையில் ஊறிப்போயிருக்கிறவர்களிடம், நலஞ் செய்வதற்கு பதில், பலமான எதிர்ப்பையே தோற்றுவிக்கும். 'யமதேவன்' கதையை அளவறிந்து கையாண்டு செய்து காட்டுவது—நாடக, நிழல் பட உருவி—முதல்தரமான பயனை உடனடியாக உண்டாக்கும்!

மக்களின் அறியாமையைப் போக்க பல திட்டம் தேவை! ஒரு துறையில் அல்ல, பல துறைகளிலும் பகுத்தறிவு பிரசாரம் செய்ய வசதி வேண்டும்!

காங்கிரஸ் ஆட்சியிலே, அதற்கு அறிவொளி பரப்புக எழுத்துக்கும் பேச்சுக்கும் இடமுண்டா? கிடையாதே!

காலட்சேபம் அல்லவா நடைபெற வேண்டுமென, காங்கிரஸ் போர்வையில் புகுந்துள்ள 'சித்' புருஷர்கள் சித்தாகுலம் கொண்டிருக்கின்றனர்.

புராணக் கதைகளை கையாண்டு செய்யும் நாடக உரையாடல் மலிந்த நாடகங்களை, நடிக்கக் கூடாது என்றல்லவா, ஆளவந்தவர்கள் அட்டகாசம் செய்கின்றனர்!

சீர்திருத்தக் கருத்துக்களைப் புகுத்தி நிழல் படம் எடுத்தால், அதை வெட்டித் தள்ளி, படத்தை உருப்படாமல் செய்கிறவல்லவா, நாட்டுக்குச் செய்யும் சிறந்த சேவை என காங்கிரஸ் அரசாங்கம் கருதிக் கொண்டு இருக்கிறது?

பகுத்தறிவு பேசுவோர், பழிசுமத்தப்பட்டு சிறைகளுள் தள்ளப்படுவதும், அறிவிடல் ஏடுகளை மக்களிடம் பரவ விடாமல் தடுப்பதும், பிரசாரத் தாள்கள் நடைபெற விடாமல் ஜாமீன் தொகை கேட்பதும், காங்கிரஸ் ஆளவந்தார்களின் நித்திய நடவடிக்கையாகவல்லவா இருக்கிறது?

பல சங்கடங்களுக்குள்ளாகி கழகத் திராவிட இயக்கம், இப்பகுத்தறிவு பிரசாரத்தில் ஈடுபட்டு இருக்கிறது மேலும் தேவை, இத்துறையின் பிரசாரம்! அறிவுப் படை தேவை! மக்களை பகுத்தறிவை வளர்க்க, நாட்டின் நலலறிவாளர்களைக் கூவி அழைக்கிறோம்!

இப்பிரசார முறை ஒன்றினாலேயேதான், மடைமையை அகற்றி, மக்களைப் பகுத்தறிவாளர்களாக மாற்றி அமைக்க முடியும்!

அப்பொழுதுதான், 'யமதேவன்' சாக நாம் வழி செய்தவர்களாவோம். யமதேவனை சட்டத்தால் கொல்ல முடியாது! பகுத்தறிவு பிரசாரத்தால்தான் இல்லாமல் ஒழிக்க முடியும்!

வீழ்க மடைமை! வாழ்க அறிவொளி!

அணுசக்தியால் வைத்தியத் துறை முன்னேற்றம்

வாஷிங்டன், ஜூன் 7—நோய்களை ஒழிக்க அணுசக்தி எவ்வாறு பயன்பட்டுள்ளது என்பதை இங்குள்ள அணுசக்தி உபகமிட்டி முன்பு ஆராய்ச்சி செய்து வருகிறது. புற்று நோய் இருதய நோய் போன்ற வியாதிகளை ஒழிப்பதற்கும் பயன்படும் பல மருந்துகள் அணுசக்தியின் மூலம் உண்டாகியுள்ளன என்றும், உடனடியாக அதிமான பலன் ஏற்படாவிட்டாலும் வியாதிகளை அறிவதற்கு இவை உபயோகப் படுத்தப்படும் என கமிட்டியின் தலைவர் தெரிவித்தார்.

ஐந்து ஆண்டுத் திட்டம்!

தேசிய வருமானம் குறித்து தேஷ்முக்

கர்நூல், ஜூன் 7—

"நாட்டின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான் ஐந்தாண்டுத் திட்டத்தின் லட்சியம். அந்த லட்சியத்தை நோக்கித்தான், தேசிய உற்பத்தியில் தேசிய செலவு போகக் கிடைக்கிற தேச வருமானத்தைக் கொண்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நிறைவேறி வருகிறது;

"அபிவிருத்தி முயற்சிக்காக, தேச வருமானம் எந்த அளவில் கிடைக்கிறது என்பதுதான் பிரச்சினையாயிருக்கிறது. முன்னேறியுள்ள வேறு பல நாடுகளில், 25 சதவிகிதத்திற்கும் அதிகமாக, அபிவிருத்திக்கு தேசிய வருமானம் கிடைக்கிறது; ஆனால் பொருளாதார முன்னேற்றத்திற்காக இந்தியாவில் 5 முதல் 7 சத விகிதம் வரைதான் தேசிய வருமானம் ஒதுக்கப்பட முடிகிறது. காரணம் எல்லோருக்கும் தெரிந்ததே."

இவ்வாறு தனக்கு கர்நூல் நகரசபையினர் தந்த வரவேற்புக்கு பதிலளிக்கையில் யூனியன் சர்க்கார் நிதி மந்திரி தேஷ்முக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"1970-ல் தேசிய வருமானம் இரட்டிப்பாக்கப்படலாம்; அப்போது அபிவிருத்திக்காக 20 சத விகிதம் வரை நாம் செலவிட முடியும்—திட்டங்கள் புத்திசாலித்தனமானவையாயும், அவைகளை நிறைவேற்றுவதில் ஆர்வம் மிகுதியும் இருந்தால்! 25 ஆண்டுகள் இந்த முன்னேற்றத்திற்கு அதிகமா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வேறுபல நாடுகளின் தேசிய வருமானத்தில் முன்னேற்றம் காண செலவிட்டுள்ள காலத்தைக் காட்டிலும் இந்த 25 ஆண்டுகள் குறைவானதே" என்றார்.

சுக்கிர நட்சத்திர மண்டலத்தில் உயிர் ராசிகள்!

லண்டன், ஜூன் 6—

ஒரு ரஷிய சோதிடர் சுக்கிர நட்சத்திர மண்டலத்தில் உயிர்கள் வளர்தல்கூடும் என கருதுவதாக இன்று மாஸ்கோ ரேடியோ அறிவித்தது.

எண்ணற்ற இரவுகளை, இந்த நட்சத்திர மண்டல ஆராய்ச்சியில் செலவிட்டு வரும் பேராசிரியர் நிகோலாய் பாராட்டோவ் என்ற ரஷியர் சுக்கிர நட்சத்திர மண்டலத்தின் பெரும் பகுதியில் தண்ணீர் நிரம்பியிருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார் என்றும் இதே பூகோள, பௌதீக நிலைதான் இந்த பூமியில் 30 கோடி ஆண்டுகளுக்கு முன்—அதாவது முதல் உயிர் ராசிகள் தோன்றும் காலத்தில்—நிலவியதாகவும் அந்த ரஷியர் கூறியதாகவும் மாஸ்கோ ரேடியோ அறிவித்தது.

இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் இந்தியர்களே!

'அவர்களை இந்தியாவே ஏற்றுக்கொள்ள வேண்டும்'

கொழும்பு, ஜூன் 7—

"இந்தியாவிலிருந்து இலங்கை வந்து தோட்டங்களில் தொழிலாளர்களாக இருப்பவர்களை இந்திய அரசாங்கம் 'ராஜ்யமற்றவர்கள்' என்று கருதுகிற நிலையைக் கடைப்பிடித்தாலும் அது சட்டவிரோதமானது மட்டுமின்றி, சர்வதேசச் சட்டங்களுக்குப் புறம்பானதுமாகும்,"

என்று, இலங்கை மக்கள் சபை உறுப்பினரான தோழர் பேர்னாட் ஜலுசிசரி ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் அதில் எழுதியிருப்பதாவது.—

"மேலை நாடுகள் செய்வது போன்று இந்தியாவும் இலங்கையைக் காலனி நாடாக ஆக்கி வைத்துக் கொள்ளப் பார்க்கிறது"

"ஆக்கிரமித்துக் கொண்டிருந்த ஆங்கிலேயர் வெளியேறிவிட்டனர்; ஆனால், அவர்கள் வைத்திருந்த தொழிலாளர் பட்டாளம் (இந்தியத் தொழிலாளர்கள்) இன்று இலங்கையைக் காலனியாக்க முயற்சிக்கிறது. இதுதான் உண்மை நிலை."

அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்:—

இலங்கையில் இப்போதுள்ள தோட்டத் தொழிலாளர்கள் எல்லாம் சமீப காலத்தில் இலங்கை வந்தவர்களே. இலங்கையிலே இவர்கள் எல்லாம் பாரம்பரியமாய் வசிக்கிறார்கள் என்று சொல்வது வெறும் கற்பனை — பொய்; சுமார் 75,000 பேர்கள் மட்டுமே தான் இலங்கையில் பிறந்தவர்கள். இலங்கையில் உள்ள மற்ற எல்லா இந்தியரும், இந்திய தேசத்தவரேயாவர்; இந்தியா அவர்களை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்; ஏனெனில், இலங்கை அவர்கள் அத்தனை பேரையும் வைத்துக்கொள்ள இயலாதஅளவு மிகச் சிறிய நாடு"

கடன் கொடுத்தவர்

கடன் பட்டார் போல் கலங்குகின்றனர்!

கொழும்பு, ஜூன் 7—

இலங்கையிலிருந்து இந்தியரை வெளியேற்றும் முயற்சியை இலங்கை அரசு மேற்கொண்டிருப்பதில் அதிகமாகப் பீதி அடைந்திருப்பவர்கள் லேவாதேவி செய்பவர்களும், நகை முதலியன மீது ஈடு கடன் தருபவர்களும்தான்! இவர்கள் தற்காலிகமாகத் தங்கும் அனுமதியுடன் அங்கிருக்கின்றனர்.

இவர்கள் இப்போது புதிதாக யாருக்கும் கடன் தருவதில்லை. கொடுத்திருக்கிற கடனை உடன் திரும்பப் பெறுவதிலேயே மும்முரமாக இருக்கின்றனர். எப்படியும் இவர்கள் வெளியேற்றப்பட்டுவிடுவோர்கள் என்ற தைரியத்தில், சிங்களவர்கள், வாங்கிய கடனைத் தராது சால்ஜாப்பு சொல்லி வருகின்றனராம்!

இப்போது இவர்கள் கல்லாய்ச் சமைந்துவிட்டிருக்கின்றனர். கடனுக்கு ஈடாகப் பெற்றுள்ள நகைகளைக்கூட ஏலம் போட்டு ஈடு செய்துகொள்ள இயலாத நிலையில் இந்திய லேவாதேவிக்காரர்கள் சஞ்சலப்படுகின்றனராம்!

கல்வித் திட்ட ஒழிப்பு: வெற்றி விழா

மன்னார்குடி

மன்னார்குடி ஆனைவிழுந்தான் குளக்கரையில் வெற்றி விழா நடைபெற்றது. தோழர்கள் துரைராசன், செகதீசன், இராசகோபால் ஆகியோர் பேசியபின் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

செல்வபுரம்

தோழர் வணங்காமுடி தலைமையில், தோழர்கள் செஞ்சேரன், சுந்தரம், நாராயணசாமி, கோபி. வி. என். ராசு ஆகியோர் பேசியபின் சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

திருவில்லிபுத்தூர்

25—5—54ல தோழர் கெ மெஞ்ஞானகுரு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

செவ்வாய்பேட்டை (சேலம்)

500 குழந்தைகளுக்கு தின்பண்டம் வழங்கப்பட்டதுடன் கூட்டம் ஒன்றும் நடந்தது தோழர் மெய்யப்பா தலைமையில் அன்புமணி, கல்லாவி சீனிவாசன், என். ஆர். தாஸ் ஆகியோர் பேசினர்.

அயோத்தியபட்டணம்—மேட்டுப்பட்டி

காலையில் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கியதுடன், மாலை பொதுக் கூட்டத்தில், தோழர்கள் பொன்னுச்சாமி, இராமசாமி, குழந்தைவேலன் ஆகியோர் பேசினர்

வெஞ்சமடை

சிறுவர்களுக்குத் தின்பண்டங்கள் வழங்கியதுடன், தோழர் காளிமுத்துவால் கொடியேற்றப்பட்டது.

சென்னிமலை

ஊர்வலம் நடந்ததுடன் சிறார்களுக்கு மிட்டாய் வழங்கப்பட்டது. கூடியிருந்தோருக்கு வெற்றி விழா பற்றி விளக்கம் தரப்பட்டது

நாகப்பட்டினம்

கழகம் அலங்கரிக்கப்பட்டது; பொதுக் கூட்டம் நடைபெற்றது தோழர் சித்ரவேலு தலைமையில் தோழர்கள் ஏ. என் பாண்டியன், கிருஷ்ணமூர்த்தி, கல்யாணம், சம்பந்தம், சதாசிவம், செயசந்திரன் பி. ஏ., பி. டி., ஏ. என். மணி, ஆகியோர் பேசினர். பெரியோர்களுக்கு சந்தனம் தாம்பூலமும், சிறுவர்களுக்கு மிட்டாயும் தரப்பட்டது.

வளவனூர்

தோழர் கா. நா. மகாதேவன் தலைமையில் பள்ளி சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

கிச்சிப்பாளையம் (சேலம்)

தோழர் மாரியப்பன் கொடியேற்றிவைத்தார் தோழர் பெருமாள் தலைமையில் தோழர்கள் ராமசாமி, துரைவேந்தன், லட்சியவீரன், அய்யாவு ஆகியோர் பேசினர். மாணவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

உறந்தை (திருச்சி)

கலை மன்றத்தின சார்பில் சி. மாரியப்பன் கொடி ஏற்றினார் தோழர் அன்பமணி பேசினார். சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

பொன்மலைப்பட்டி

தோழர் ராமலிங்கம் தலைமையில் தோழர்கள் கோவிந்தசாமி இராமையன், சி என். மணி ஆகியோர் பேசினர். குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

பம்பாய்

புத்தர் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில் தோழர்கள் சிதம்பரனார், முனுசாமி, குமாரசாமி, கேசவன் ஆகியோர் பேசியபின, இனிப்பு வழங்கப்பட்டது.

அருப்புக்கோட்டை

பகுத்தறிவுப் படிப்பகத்தின் சார்பில் சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

ஓரக்காட்பேட்டை

வெற்றிவிழா கூட்டமொன்றில் பலர் பேசினர் சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

தூத்துக்குடி

காலையில் பெரும் சைக்கிள் ஊர்வலம் நடைபெற்றது. மாலை சண்முகபுரம் மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தாளமுத்து, அருணாசலம் ஆகியோர் பேசினர்.

ஆமதாபாத்

23—5—54ல், நகர தி. மு. கழக செயற்குழு கூடி, புதிய கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டதற்கு பாராட்டு தெரிவித்தும், இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேறியது.

சீலையம்பட்டி

3—6—54 இரவு 8 மணிக்கு தி மு கழகத்தவரால், வெற்றி விழா தோழர் செல்லப்பா தலைமையில் கொண்டாடப்பட்டது

கீரனூர்

பள்ளி மாணவர்களுக்கு கழகத் தோழர்கள் இனிப்பு வழங்கி விழா கொண்டாடினர்.

கல்பகனூர்

1—6—54ல், மாணவர் ஊர்வலம் நடைபெற்றதுடன் தோழர் ஆறுமுகம் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் துரைசாமி கருப்பண்ணன், மோகன் நாராயணன் ஆகியோர் பேசினர்; சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது

ஆரியபாளையம்

28—5—54ல் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது தோழர் நாகரத்தினம் தலைமையில் தோழர் முத்துசெழியன் பேசியதும், குழந்தைகட்கு இனிப்பு வழங்கப்பட்டது

தேவகோட்டை

30,00 குழந்தைகட்கு தி மு கழகத்தவர் மிட்டாய்கள் வழங்கினார்கள்.

மாரண்ட அள்ளி

1—6—54 அன்று மாணவர்களுக்கு மிட்டாய் வழங்கப்பட்டதுடன், தோழர் சீலோமகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் ராட்சா, பசவாரசன், கவிவெங்கடன் முதலியோர் பேசினர்

மொளையானூர் (பொம்மிடி)

31—5—54ல் தோழர் அண்ணாமலை தலைமையில் பல தோழர்கள் பேசினர்.

துறையூர்

பெரியோர்களுக்கு சந்தனமும் மலரும், பள்ளிச் சிறார்களுக்கு இனிப்பும் வழங்கி கழகத்தவர் விழா கொண்டாடினர்.

கண்டமங்கலம்

தோழர் வடிவேலு தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில், தோழர் ராமசாமி மற்றும் பலர் பேசினர். பின் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது

மின்னம்பள்ளி

பள்ளிச் சிறார்களுக்கு இனிப்பு வழங்கி விழா கொண்டாடினர்

விளாம்பட்டி

மாணவர்கள் கொண்ட ஊர்வலம் நடத்தி சிறார்களுக்கு தின்பண்டம் வழங்கி, விழா நடத்தினர்.

உசிலம்பட்டி

நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு இனிப்பு வழங்கி கோலாகலமாக வெற்றி விழா நடைபெற்றது.

தாயில்பட்டி

சிறார்களுக்கு இனிப்பு பண்டங்கள் வழங்கப்பட்டது.

கழகச் செய்திகள்

கீழப்பட்டு தி. மு. கழகத் திறப்பு விழா

28—5—54ல், தி மு. கழகத் திறப்புவிழா தோழர் கெ. பி பெருமாள் தலைமையில் நடைபெற்றது: தோழர்கள் ஜே என் பசனூர், சி. செல்லமணி, சுப்ரமணியம், ஏ முனுசாமி, கோ ஆழிவண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பூலாமேடு தி. மு. கழகம்

சிதம்பரம் வட்டம் கந்திமங்கலம் பூலாமேடு கிராமத்தில் 31-5-54ல தி மு கழக அமைப்புக் கூட்டம் தோழர் வை. நா இராமசாமி தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் பி எம். சண்முகம் செயலாளராகவும், என் நாராயணசாமி துணைச் செயலாளராகவும், என். கண்ணுதுரை பொருளாளராகவும், ஏ இராசாமணி மாவட்டப் பிரதிநிதியாகவும், செயற்குழு உறுப்பினர்களாக எம் சோமசுந்தரம், என். பக்கிரிசாமி என். முத்துக்குமரன், வி. கோவிந்தசாமி, என். செல்லசாமி, என். பிச்சைதுரை, டி பாலவடை, டி இராமதுரை ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குருக்குப்பட்டியில் தி. மு. கழக பொதுக் கூட்டம்

சலகண்டாபுரம், மே 31—

இங்கிருந்து 4 மைல் தொலைவிலுள்ள குருக்குப்பட்டி என்னும் ஊரில் 31—5—54ல், தி மு கழகப் பொதுக் கூட்டம் தோழர் அண்ணாமலை தலைமையில் தோழர்கள் ப. கண்ணன், கந்தப்பன், க. கே. குருநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பு. ஆதிவராகநல்லூர் தி. மு. கழகம்

9—5—54ல், புலவர் தோழர் ஆ. கோவிந்தராசு தலைமையில், தி மு கழகம் நிறுவப்பட்டது. தோழர்கள் சந்திரகாசன் செயலாளராகவும், பி. ராசாங்கம் துணைச் செயலாளராகவும், டி கலியமூர்த்தி, பொருளாளராகவும், என். மூர்த்திராமன் விளம்பர உறுப்பினராகவும் என். என். கண்ணப்பன் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வெங்கடேசபுரம் தி. மு. கழகம்

31—5—54 இரவு 10 மணியளவில் தோழர் டி. பி. அழகமுத்து தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: ம. சோமசுந்தரம் செயலாளர், மாவட்டப் பிரதிநிதி; அ. பக்காருசாமி துணைச் செயலாளர்; சி. சின்னசாமி பொருளாளர்; செயற்குழு உறுப்பினர்கள்: கிருஷ்ணன், ச. துரைசாமி, ம. ஆண்டி, ந வாசன், ந. சோழன், ப. முருகேசன், பெ. மாணிக்கம். ரா. வீரன்.

அய்யம்பேட்டை தி. மு. கழகம்

27—5—54 மாலை 7 மணிக்கு தோழர் அர்த்தநாரி தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது நிர்வாக உறுப்பினர்களாக தோழர்கள் அருணாசலம், வே. சண்முகம், டி. கோவிந்தராசு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

உலக அரங்கில்

சைகோன் :
தின் - பின் - பூ வீழ்ச்சியில் பிரெஞ்சுப் படையின் தளபதியாயிருந்த ஜெனரல் நவாரே தனக்கு பிரெஞ்சு சர்க்கார் மேலும் 22,000 துருப்புகளை அனுப்பியிருந்தால் தோல்வி ஏற்பட்டிருக்காது என்று கூறினார்.

★

பெல்கிரேட் :
வடக்கு யுகோஸ்லோவேகியாவான சலோவேனியாவில் வெள்ளப் பெருக்கால் 21 பேர் மாண்டு போயினர் என்று தெரிகிறது.

* * *

கிரீசில் ஐந்து நாட்கள் சுற்றுப் பயணம் செய்த பிறகு மார்ஷல் டிட்டோ பெல்கிரேட் திரும்பினார்.

★

ஹனோய் :
ஹனோய்க்கு 15 மைல் அருகே உள்ள இரண்டு பிரதேசங்களை பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து வியட்மின் துருப்புகள் கைப்பற்றின.

★

லண்டன் :
தென் அமெரிக்க நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதாகவும், இந்தோ-சீனாவில் போரை நீடிக்க சதி செய்வதாகவும், அமெரிக்கா மீது சோவியத் கம்யூனிச இதழான 'பிராவ்தா' குற்றம் சாட்டியது.

* * *

பிரதமர் சர்ச்சில் தன் பதவியை ஈடனிடம் கொடுக்க ஏற்பாடுகள் செய்கிறார் என்று 'டெய்லி ஹெரால்டு' பத்திரிகை எழுதியிருக்கிறது.

★

ஜினீவா :
கொரியா பற்றிய இரகசிய வல்லரசு மாநாட்டை ஒத்தி வைக்க சோவியத் பிரதிநிதி மாலடோவ் ஒப்புக் கொண்டிருக்கிறார். சனிக்கிழமையன்று கொடுக்கப்பட்ட திட்டங்களைப் பரிசீலிக்க கம்யூனிஸ்டு அல்லாத நாடுகளுக்குப் போதிய அவகாசம் தேவை என்பதாலேயே இந்த ஏற்பாடு.

* * *

பிரிட்டன்—சீனா ஆகிய இரு நாடுகளுக்கிடையே வியாபாரம் பற்றி ஆராய சீனாவிலிருந்து ஒரு தூதுக் குழு லண்டன் செல்லுமென்று சீனப் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

* * *

வி. கே. கிருஷ்ண மேனன் பிரிட்டிஷ் தூதுக் குழுவினைச் சேர்ந்த ரீடிங் பிரபுவைச் சந்தித்துப் பேசினார். அவர் வியட்மின் உதவிப் பிரதமர் பாம்வன் டாங் என்பவரையும் சந்தித்தார்.

★

கெய்ரோ :
அரசாங்கத்துக்கு எதிராகச் சதி செய்தனர் என்ற குற்றம் சாட்டி பதினாறு இராணுவ அதிகாரிகளுக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டுமென்று புரட்சிக் கவுன்சில் முன்பாகக் கோரப்பட்டது.

★

நைரோபி :
"நீங்கள் பணிந்து போகும் வரையில் உங்களைக் கொன்று குவிக்க நாங்கள் தயங்கமாட்டோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்," என்று கென்யா மக்களை அரசாங்கம் எச்சரித்துள்ளது.

★

பியூனஸ் அயர்ஸ் :
மரோன் தொழிற்சாலையில் அருகே உலோகத் தொழிலாளர் சங்கச் செயலாளரை அங்கே மறியல் செய்யும் சில தொழிலாளர்கள் சுட்டுக் கொன்றனர் என்று தெரிகிறது.

ஏதென்ஸ் :
அரசியல், இராணுவத் துறைகளில் கிரீஸ், துருக்கி, யுகோஸ்லோவாகியா ஆகிய நாடுகளிடையே உதவி ஒப்பந்தம் ஒன்று தயாரிக்கக் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தம் பின்னர் மூன்று நாட்டு அரசுகளால் பரிசீலிக்கப்பட்டு கையெழுத்தாகும்.

★

நியூயார்க் :
துருக்கியின் இராணுவ முன்னேற்றத்துக்காக அமெரிக்க உதவி பற்றிய பூரண ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது என்று துருக்கிப் பிரதமர் மென்டர்ஸ் தன் நாடு திரும்பும்போது கூறினார்.

★

வாஷிங்டன் :
இந்த ஆண்டுதான் உலகத்தில் இதுவரையில் இல்லாத அளவு அதிகமாக உணவு உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது என்று அமெரிக்க விவசாய இலாகா அறிவித்தது.

★

வின்னிபிக் :
கோதுமையின் விலையைக் குறைப்பதென்று கனடா சர்க்காரின் கோதுமை போர்டார் முடிவு செய்திருக்கின்றனர். அமெரிக்கர் தன் கோதுமையின் விலையைக் குறைக்க முயற்சித்ததாலேயே தாங்களும் விலையைக் குறைக்க நேர்ந்ததாக கனடா வியாபார அமைச்சர் கூறினார்.

★

போர்ட்செயிட் :
சென்ற மாதம் போர்ட் செயிட்டில் உள்ள பிரிட்டிஷ் இராணுவ முகாம் ஒன்று தீப்பிடித்து எரிந்தது பற்றி தங்கள் சர்க்காருக்கு சம்பந்தம் இல்லையென்று எகிப்து சர்க்கார் மறுத்து விட்டனர்.

★

டோக்கியோ :
ஜப்பான் பிரதமர் யோஷிடா தன் உலக சுற்றுப் பயணத்தை ஒத்தி வைத்து விட்டதாகவும் தான் முன்பு தெரிவித்த காலத்தில் டில்லிக்கு வர இயலாதென்றும் இந்திய சர்க்காருக்கு தெரிவித்திருக்கிறார்.

* * *

ஜப்பானிய சர்க்கார் பிக்னி தீவில் நடைபெற்ற நீர்வாயு குண்டு சோதனையில் நஷ்டமடைந்த மீன் பிடிப்போருக்கு 55,000 டாலர்கள் நஷ்டஈடு தர முடிவு செய்துள்ளனர்.

★

தைப்பே :
தேசியச் சீன கொரில்லாப் படையினர் 6,000 பேர் பர்மாவிலிருந்து பார்மோசாவுக்கு அனுப்பப்பட்டுவிட்டனர் என்று பார்மோசா சர்க்கார் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

★

சசெக்ஸ் :
இங்கிலாந்தில் உள்ள ஜெய்ப்பூர் மகாராஜா வீட்டில், 6000 பவுன்களுக்குச் சமமான பொருள்கள் திருட்டுப் போயின என்று தெரிகிறது.

★

சிங்கப்பூர் :
ஆர். ஏ. ஈப்பையைச் சேர்ந்த சார்லி என்னும் ஆங்கிலேய காவல் நாய் ஒன்று, கம்யூனிச பயங்கரவாதி ஒருவரைத் துரத்திச் சென்று கொன்றுவிட்டதாம்!

★

ஜார்ஜ்டவுன் :
அரை நிர்வாண கோலத்துடன் வாழும் 16,000 பிரிட்டிஷ் கயானா மக்கள் முன்னேற்றமடைவதற்கான திட்டங்களைப் பற்றி ஆராய தனிக் குழு ஒன்றை கயானாவிலுள்ள பிரிட்டிஷ் கவர்னர் ஏற்படுத்தியிருக்கிறார்.

கழகக் கூட்டம்

★

திருமங்கலம்
10—6—54 மாலை 6 மணிக்கு
தலைவர் :
தி. நா. கோ. அண்ணாமலை
பேசுவோர் :
மு. கருணாநிதி
என். வி. நடராசன்

விளையாட்டில் நிறபேதம்

சட்டம் தயாராகிறது!

பர்மிங்காம் (அலபாமா)— விளையாட்டிடங்கள், நீச்சல் குளங்கள், கடற்கரை, ஏரிகள் போன்ற இடங்களில் நீக்ரோக்களும், வெள்ளையர்களும் சேர்ந்து விளையாடுவதைத் தடை செய்யும் மசோதா ஒன்று தயார் செய்யப்படுகிறதாம்.

இப்பிரச்சினை பற்றி நீக்ரோ தலைவர்கள் பெடரல் நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்ய இருக்கின்றனர்.

ஆனால், இச்சட்டத்தைக் கொண்டு வருவோரில் முக்கியமானவரான ஹக்லக்ஸ் என்பவர், இச்சட்டத்தை நீதி மன்றம் ரத்து செய்யாதென்றும்; கல்விப் பிரச்சினை போன்றதல்ல இப்பிரச்சினை—இச்சட்டம் மாநில அதிகாரங்கள் பற்றியதே பறி, உரிமை பற்றியது அல்ல என்றும் கூறினர்.

இச்சட்டத்தின் மூலம் டென்னிஸ், பேஸ்பால், கோல்ப், கால்பந்து முதலிய விளையாட்டுகளில் இரண்டு நிறத்தவர்களும் கலந்து விளையாடுவது தடை செய்யப்பட்டிருக்கிறது.

ரண சிகிச்சையில் பயன்படும் மின்சாரக் கருவி

வாஷிங்டன், ஜூன் 7— நோயாளியின் இரத்த அழுத்தம், இருதயத் துடிப்பு, சுவாசம் முதலியவற்றை ஒரே சமயத்தில் குறிக்கும் "மானிட்டர்" என்ற மின்சாரக் கருவியொன்று அமெரிக்க தர நிர்ணய ஸ்தாபனத்தினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ரண சிகிச்சை நடைபெறும் பொழுது நோயாளியின் நிலையைத் தெரிந்துகொள்ள இதனால் வசதி கிடைக்கின்றது.

சர்தார் பணிக்கரை பற்றி பண்டித நேரு!

புதுடில்லி, ஜூன் 6— பிரதம மந்திரி பண்டித நேரு, சீனாவில் இந்தியாவின் முன்னாள் தூதுவரான பணிக்கரைப் பற்றி, "அவர் பீகிங் நகரிலிருக்கும் போது ஒரு கம்யூனிஸ்டாகவும், வாஷிங்டனிலிருக்கும்போது ஒரு விடுதலை வீரனாகவும் இருப்பார்," என்று குறிப்பிட்டிருப்பதாக ராஜா ஹதீசிங் என்பவர் எழுதி அமெரிக்காவிலிருந்து பிரசுரிக்கப்பட்டிருக்கும் 'சைனாவின் அகன்ற ஜன்னல்' ('விண்டோ ஆன் சைனா') என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதை, பண்டித நேருவின் காரியாலயம் இன்று பத்திரிகைக் குறிப்பொன்றின் மூலம், 'பண்டித நேரு பணிக்கரைப் பற்றி ஒருபோதும் அப்படிக் குறிப்பிட்டதில்லை' என்று மறுத்திருக்கிறது.

ஒரு வருடத்திற்கு முன் பண்டிதருக்கு இத்தகவல் கிடைத்த போது, பண்டிதர் ஹதீசிங்கிற்கு 'தான் அப்படிக் கூறியதில்லை,' என்று கடிதம் எழுதினார்.

அதன்பின் ஹதீசிங், அந்தப் புத்தகத்தை வெளியிட்டவர்களுக்கு அந்த வாக்கியங்களை எடுத்துவிடுமாறு எழுதியிருப்பதாக பிரதமருக்கு அறிவித்தார் என்று சொல்லப்படுகிறது.

வேலையின்மை...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வேலையில்லாத் திண்டாட்டம் நிரந்தரமாக ஒழிக்கப்பட முடியும். முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே, வேலையில்லாத் திண்டாட்டம் முழுவதும் ஒழிக்கப்பட முடியாது போய்விடுமென நான் அஞ்சுகிறேன்; "எந்தவித அரசியல் நிபந்தனைகளுமன்றி இந்தியா வெளிநாடுகளிலிருந்து பெறும் பொருளாதார உதவி பற்றி யாரும் பயப்படத் தேவையில்லை,"

இவ்வாறு யூனியன் சர்க்கார் நிதி மந்திரி சிந்தாமணி தேஷ்முக் சென்ற வாரத்தில் இங்குள்ள காங்கிரஸ்காரர்களிடம் பேசுகையில் அதிகாரப் பற்றற்ற முறையில் தெரிவித்தார்.

மக்கள் முன்னேற்றக் கழக 2-ம் ஆண்டு விழா

எல்லா கட்சியினரும் பங்குகொண்டனர்

(நமது தனி நிருபர்)

சென்னை, ஜூன் 8— நேற்று மாலை 7 மணிக்கு சென்னை ஆழ்வார் பேட்டை மக்கள் முன்னேற்ற மன்றத்தின் 2-ம் ஆண்டு விழா தோழர் பி. ராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழியர் கிருஷ்ணாபாய், தோழர்கள் டி. எம். சண்முகம் எம். சி., ப. ஜீவானந்தம் எம். எல். ஏ., தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியோர் பேசினர். கூட்டத்தில் கலந்து கொள்வதாக இருந்த டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் உடல் நலக் குறைவால் கலந்துகொள்ளவில்லை. கூட்டத்தில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

தோழியர் கிருஷ்ணாபாய் பேசுகையில், வட்டத்தின் சுகாதாரக் கேடுகள் போக்கப்பட வேண்டியதைக் குறித்தும், குழந்தைகளுக்குத் தேவையான கல்வி போதிக்க, நகரசபை தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய வட்ட நகரசபை உறுப்பினரும் திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவருமான தோழர் டி. எம். சண்முகம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"வட்டத்தில் சுகாதாரக் குறைவால் கஷ்டப்படுபவர்களும், கல்வி கற்க வசதியில்லாது அவதிப்படுபவர்களும் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள்தான்; அன்றியும், இவ்வட்டத்தின் மிகப் பெரும் பகுதியினர் திராவிடர்களே; அவர்கள் கஷ்டங்கள் எல்லாம் நிரந்தரமாக நீக்கப்படுவதற்கு திராவிட நாடு திராவிடர்க்காக வேண்டும்; அப்போதுதான்— திராவிட இனத்தை இன்று நசுக்கிக் கொண்டிருக்கும் தீய சக்திகள் அழித்தொழிக்கப்பட்டால் தான்—திராவிடர்களுக்கு விமோசனம் கிடைக்கும். வட்டத்தின் சாதாரணத் தேவைகளைப் பெற நாம் போராட வேண்டும்—புரட்சி செய்ய வேண்டும்," என்றார்.

அடுத்து கம்யூனிஸ்டு தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் பேசினார். (அவர்கள் பேச்சின் சாரம் நாளை வெளிவரும்)

அடுத்துப் பேசிய வட்ட நகர

செய்திக்கதிர்

கல்லூரி
அகில இந்தியப் பெண்கள் கௌன்சிலால் பம்பாயில் ஜூன் 25-ம் தேதி முதல் ஓட்டல்களில் சேவை செய்தல், நிர்வாகம் ஆகியவைகளில் பயிற்சி அளிக்க கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

★

'தினமணி'
மலையாள மொழியில் 'தினமணி' என்ற தினசரி ஒன்று கொல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. திரு—கொச்சியில் உள்ள நான்காவது மலையாள தினசரியான இந்த இதழுக்கு அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினராக இருந்த சங்கர் மானேஜிங் ஆசிரியராக இருப்பார்.

★

அணைக்கட்டு
கிருஷ்ணா நதி அணைத் திட்டம், ஏற்கனவே உத்தேசித்துள்ளபடி திட்டக் கமிஷனால் அமுல் நடத்தப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் தேஷ்முக் கர்னூல் கூட்டமொன்றில் அறிவித்தார்.

★

லஞ்ச ஒழிப்பு
திருவாங்கூர் - கொச்சியில் அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் லஞ்ச ஒழிப்பு இலாகா ஒன்றை ஏற்படுத்த சட்டம் ஒன்று கொண்டு வரப்படும் என்று தெரிகிறது.

★

பூதானம்
"பூதான இயக்கத்தை நான் எதிர்க்கவில்லை, ஆனால் இந்த யுக்தியின் மூலம் ஒரு புதிய வாழ்க்கைத் தத்துவம் உருவாகும் என்பதை நான் நம்பவில்லை," என்று, பிரஜா - சோஷலிஸ்டு தலைவர் ஆச்சார்ய நரேந்திர தேவ் கூறினார்.

★

உறுதிமொழி
தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு ஒன்றில் பேசும்போது சென்னை முதல் அமைச்சர் கே. காமராசர், ராஜ்யத்தில் முஸ்லிம் சிறுபான்மையினரின் உரிமை பாதுகாக்கப்படும் என்று கூறினார்.

★

மன்னரின் மகிழ்ச்சி
"நேப்பாளத்திற்கு இந்தியா அதிகமாக உதவி அளிக்கிறது; பூகோள, கலாச்சார ஒற்றுமை எங்கள் இரு நாடுகளின் கொள்கையிலும் ஒரே மாதிரியானது," என்று நேபாள மன்னர் திருபுவன் நேப்பாள சட்டசபையில் பேசும்போது கூறினார்.

★

கூட்டுறவு
கூட்டுறவு இயக்கத்தின் மூலம் பல உரிமைகளைப் பெறலாம் என்றும், அதில் ஊழல்கள் ஏற்பட வழி இல்லையென்றும் தென் இந்திய கூட்டுறவு இன்சூரன்ஸ் சொசைட்டியின் விழா ஒன்றில் பேசுகையில் வி வி கிரி கூறினார்.

★

சரித்திரச் சின்னம்
விஜய நகரத்தின் சின்னங்களான ஹம்பிகயைச் சீர்திருத்தி அதை ஒரு பிரயாணிகள் ஸ்தலமாகச் செய்ய திட்டமொன்றை மைசூர் சர்க்கார் நிறைவேற்றுவர் என்று தெரிகிறது.

[illegible] முன்னேற்றக் கழகத் [illegible] தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்கள் [illegible] அறிவித்தபடி அச்சகத்தில் அளிக்கப் போவது (இதோ நூல் நாராயண செட்டித் தெரு, [illegible]) செய்திகளின் [illegible] அனுப்புவோர் : கி. [illegible]